இந்திய உயர் ஸ்தானிகராலயம்
கொழும்பு

ஊடக அறிக்கை

இந்திய புலம்பெயர் இளைஞர்களுக்கான இந்தியாவை அறிந்து கொள்ளுங்கள் (**KIP)** நிகழ்ச்சி

இந்திய அரசாங்கத்தின், வெளியுறவுத்துறை அமைச்சு,"இந்தியாவை அறிந்து கொள்ளுங்கள் (KPI)"நிகழ்ச்சியின் 54இலிருந்து 56வரையான பதிப்புக்காக பின்வரும் தற்காலிக அட்டவணையை அறிவித்துள்ளது.

| | தற்காலிகத் திகதி | பங்குபற்றும் மாநிலம் | ஒன்லைன் சமர்ப்பித்தலுக்கான இறுதித் தினம் |
|---|---|---|---|
| 54ஆவது KPI | 2019, ஆகஸ்ட் 1 இலிருந்து 25 ஆம் திகதி வரை | பஞ்சாப் மற்றும் ஹரியானா | 2019, ஜூன்30 |
| 55ஆவது KPI | 2019, செப்டெம்பர் 3 இலிருந்து 27 ஆம் திகதி வரை | கோவா | 2019, ஜூலை 30 |
| 56 ஆவது KPI | 2019, ஒக்டேபார் 1 இலிருந்து 25ஆம் திகதி வரை | கேரளா | 2019, ஆகஸ்ட் 30 |

இந்த நிகழ்ச்சி, பல்வேறு துறைகளில் தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட, இந்தியாவுடன் ஒரு பிணைக்கும் ஆர்வத்தினை வெளிக் காட்டிய மற்றும் தங்களது பெற்றோர்கள் மூலமான தொடர்புகளைக் கொண்ட இலங்கையில் வாழும் 18 - 30 வயதுக் குழுவைச் சேர்ந்த புலம்பெயர் இந்தியர்களுக்கு உரியதாகும். வதியா இந்தியர்கள் (NRI) இந்த நிகழ்ச்சியில் விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவர்களாவர்.

KPI என்பது, பங்குபற்றுபவர்களுக்கு வாழ்க்கை முறை, கலாச்சாரம், ஆன்மீகம், சாகசம் மற்றும் விளையாட்டு, படைப்பாற்றல் மற்றும் இந்தியாவின் கூட்டுக் குணவியல்பு மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்தான இளைஞர்களுடனான இடைத்தொடர்பு போன்ற இந்தியாவின் பன்முக அம்சங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் ஒரு நோக்கத் தன்மை கொண்ட ஒரு நிகழ்ச்சியாகும். பங்குபற்றும் மாநிலத்திற்கு இடைப்பட்ட KPIபங்குபற்றுநர்களது செயற்பாடுகள் சட்டவமைப்புத் தலைமைகள் மற்றும் ஏனைய முக்கியமான ஆளுமை கொண்டவர்களுடனான சந்திப்புகளுடன் வரலாற்று, கலாச்சார, கைத்தொழில், கல்விசார் மற்றும் சுற்றுலா இடங்களுக்கான விஜயம் என்பவற்றோடு சம்பந்தப்பட்டதாக இருக்கும். கிராமத்து வாழ்க்கை மற்றும் மாநிலத்தினுள் முன்னணி பல்கலைக் கழகம்/நிறுவனம்/ஸ்தாபனம் என்பவற்றில் இடைத் தொடர்பாடல் அமர்வுகள் என்பவற்றுக்கான வெளிப்படுத்தல்களும் அவர்களுக்கு அளிக்கப்படும்.

பங்குபற்றுனர்களினால் மொத்த விமானப் பயணச் செலவின் 10% வைப்பிலிடும் நிபந்தனைக்கு உட்பட்டு திரும்பி வருவதற்குமான விமானச் சீட்டை இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்யும். KPI ஐ பூர்த்தி செய்வதாகவும், தவறும் பட்சத்தில் இந்திய அரசாங்கத்தினால் செலவு செய்யப்பட்ட விமானக் கட்டணச் செலவு இந்திய உயர் ஸ்தானிகராலயத்திற்கு மீளளிக்கப்படும் என்பதற்காக ஒரு பொறுப்பேற்பை வழங்கவதற்கான தேவையை பங்குபற்றுனர்கள் கொண்டிருப்பர்.

தகுதியான விண்ணப்பதாரிகள் **www.kip.gov.in**எனும் வலைப் பக்கத்திற்கு புகுபதிகை (login) செய்து கொள்ளல் வேண்டுமென்பதுடன் இறுதித் திகதியன்று அல்லது முன்பதாகவோ பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும். பதிவு செய்தல், விண்ணப்பித்தல் மற்றும் வழிகாட்டல்கள் தொடர்பான அனைத்துத் தகவல்களும் குறித்த இணைய வலைப்பக்கத்தில் கிடைக்கப்பெறும்.

*****

கொழும்பு
12 ஜூன், 2019